**24.2.2023**
**OS 450/2019**
**வா.சா.1  ஜெயலெட்சுமி**
**குறுக்குவிசாரணை:-**

நான் பிறந்தது மதுரை வடக்கு மாசிவீதி என்றால் சரிதான். என் அப்பா பெயர் சுந்தரராஜன். எனது தாயார் பெயர் ஆரம்மாள். எனது தாயாரின அக்கா பெயர் அழகம்மாள். அழகம்மாளின் கணவர் பெயர் சர்வலிங்க கோனார். அழகம்மாளுடன் உடன் பிறந்தவர்கள் இரண்டு சகோதரர்கள். அவர்கள் பெயர் அழகப்ப கோனார், பூசாரி கோனார். மேற்படி இரண்டு நபர்களும் எனது தாய்மாமன்கள் என்றால் சரிதான். அழகம்மாள், சர்வலிங்க கோனார், அழகப்ப கோனார், பூசாரி கோனார் ஆகியோர் ஓரே குடும்பமாக சத்திரதொண்டைமான்பட்டியில் வசித்து வந்தனர் என்றால் ஓரே ஊரில் வசித்து வந்தனர், தனித்தனியாக வசித்து வந்தனர். அழகம்மாளுக்கும், சர்வலிங்க கோனாருக்கும் குழந்தைகள் இல்லை என்றால் சரிதான். அழகம்மாளுக்கும், சர்வலிங்க கோனாருக்கும் குழந்தைகள் இல்லாத காரணத்தினால் அவர்களுடைய சகோதரர்கள் அவர்களையும், அவர்களுடைய சொத்துக்களையும் கவனித்து கொண்டார்கள் என்றால் இல்லை, குத்தகைதாரர்களாக இருந்தார்கள். மேற்படி விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா, ஆவணங்கள் மூலமாக தெரியுமா என்றால் ஆவணங்கள் மூலம் தெரியும். 1959,1960 ஆகிய காலங்களில் நான் மதுரையில்தான் தகப்பனார் வீட்டில் இருந்தேன் என்றால் இல்லை, 1958லேயே நான் அழகம்மாளுக்கும், சர்வலிங்ககோனாருக்கும் சுவிகாரமாக வந்துவிட்டேன். நான் சுவிகாரமாக வந்துவிட்டேன் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் எழுதிக்கொள்ளவில்லை என்றால் சரிதான். எங்கள் குலதெய்வமான கருப்பசாமி கோவிலில் வைத்து சுவிகாரம் கொடுக்கப்பட்டது. எனவே என்னை சட்டப்படி அழகம்மாளும், சர்வலிங்ககோனாரும் சுவிகாரம் எடுக்கவில்லை என்பதால் நான் அழகம்மாள், சர்வலிங்ககோனாரின் சுவிகார புத்திரி இல்லை என்றால் சரியல்ல. சர்வலிங்ககோனாருக்கு குழந்தைகள் இல்லாத காரணத்தினால் அவரை அவருடைய மச்சினன், மாமன் மகன்களை குடும்பம்மாக பாவித்து வந்தார் என்றால் இல்லை. நான் கோனார் சமூதாயத்தை சார்ந்தவர். நான் இந்து சமயத்தை சார்ந்தவள். என்னை சுவிகாரம் எடுத்ததற்கு எந்த ஆதாரமும் இல்லை என்றும், என்னையும் மற்றவர்களை போலவே ஒரு மகளை போல பாவித்து நடத்தி வந்தார் என்றால் சரியல்ல. எனவே நான் சர்வலிங்க கோனாருக்கு சட்டப்படியான வாரிசு அல்ல என்றால் சரியல்ல. பூசாரி கோனாரின் மனைவி பெயர் அம்மாபிள்ளை. பூசாரி கோனாரின் பிள்ளைகள் பெரிகருப்பண், வீரணன், முத்து, திருப்பதி ஆகியோர். 1977

வரைக்கும் அவர்கள் இளவர்களாகத்தான் சிறுபிள்ளைகளாகத்தான் இருந்தார்கள். அழகப்பகோனாருக்கு ஒரு மகன், அவர் பெயர் தங்கராசு. பூசாரி கோனார் எந்த வருடம் இறந்தார் என்று சரியாக நினைவில்லை. இன்றிலிருந்து சுமார் அவர் எந்த வருடம் இறந்தார் என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது, சுமார் 40 வருடமிருக்கும். பூசாரி கோனாருக்கு முன்பாக அழகப்பகோனார் இறந்துவிட்டார். இளம்வயதில் இறந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி அழகப்பகோனாரும், பூசாரி கோனாரும் அவர்களுடைய மகன்கள் இளவர்களாக இருக்கும்போதே இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். நான் சுமார் 6வது வரை படித்துள்ளேன். நான் சத்திரப்பட்டி பள்ளியில் படித்தேன். நான் மதுரையில் படிக்கவில்லை. பூசாரி கோனார் குத்தகைக்கு எடுத்தார் என்று சொல்லியுள்ளதற்கு குத்தகை கொடுத்தார் என்பதற்கோ, குத்தகை கொடுக்க வந்தார் என்பதற்கு ஆவணம் எதையும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆதாரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். என் கணவர் மணிக்கு சொந்த ஊர் மேலமடை. பொதுவாக திருமணம் முடிந்த பிறகு கணவர் வீட்டிற்கு செல்வதுதான் பெண்களுக்கு வழக்கம் என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்னிட்டு நான் என் கணவருடன் மேலமடைக்கு குடும்பம் நடத்த செல்லவில்லை, நான் சத்திரபட்டியில்தான் வசித்து வந்தேன். ஏதேனும் ஒரு காலகட்டத்தில் நானும், எனது கணவரும் வசித்து வந்தோமா என்றால் இல்லை. நானும், எனது கணவரும் சத்திரபட்டியில்தான் வசித்து வந்தோம் என்று காண்பிப்பதற்கு ஏதேனும் ஆவணம் 1966லிருந்து உள்ளதா என்றால் இல்லை. எனது கணவர் அரசியல் கட்சியில் இருந்தார். அழகப்பகோனாரும், பூசாரி கோனாரும் இளம் வயதில் இறந்துவிட்ட காரணத்தினால் மேற்படி அவர்களுடைய மகன்கள் இளவர்களுக்கு சர்வலிங்ககோனார் உதவி செய்தார் என்றால் சரிதான். அதனால்தான் பிரச்சினை ஏற்பட்டது. சர்வலிங்ககோனாருக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருந்ததினால்தான் அவர் உதவி செய்தார். எனக்கு தெரிந்த காலம் முதல் தாவா சொத்தை பூசாரிகோனார் விவசாயம் செய்தார் என்றால் குத்தகைதாரராக 1960லிருந்து விவசாயம் செய்தார். பூசாரிகோனார் இறந்த பின்னிட்டு அவருடைய மனைவி அம்மாபிள்ளையும், அவரது மக்களும் விவசாயம் செய்தார்கள் என்றால் சரிதான். அந்த காலகட்டத்தில் சர்வலிங்ககோனார் உயிருடன்தான் இருந்தார். சர்வலிங்ககோனாருக்கும் மேற்படி அம்மாபிள்ளைக்கும், அவரது மக்களுக்கும் இடையே உழவடை ஒப்பந்தம் இருந்ததா என்றால் இருந்தது. அந்த பத்திரத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன்.

மேற்படி அம்மாபிள்ளைக்கும், அவரது மக்களும் குத்தகை இருந்ததாகவோ, குத்தகை கொடுத்ததாகவோ காட்டுவதற்கு எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சர்வலிங்க கோனாரின் சொத்துக்களில் பூசாரி கோனாரோ, அவரது மனைவி, மக்களோ குத்தகைதாரர்களாக இருந்தார்கள் என்று சொல்வதற்கு எவ்வித வருவாய்துறை பதிவுகளோ இல்லை என்றால் சரிதான், மாமன், மைத்துனன்களுக்குள் வாய்கராலாக ஏற்படுத்தப்பட்டதால் பதிவுகள் இல்லை. வா.சா.ஆ.6 ஆவணம் குத்தகை ஒப்பந்தம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான். அந்த குத்தகை ஒப்பந்தம் சட்டபடி செல்லாத ஆவணம் என்றால் சரியல்ல. குத்தகை ஒப்பந்தம் சட்டபடி செல்லாத ஆவணம் என்பதால் சர்வலிங்கோனாரும், அவரது மனைவியும், பூசாரி கோனாரும் கூட்டாக உழைத்து, சம்பாதித்த சொத்தின் மூலமாக தாவா சொத்து வாங்கப்பட்டதால் பூசாரிகோனார் தொடந்து அவருடைய சொத்துபோல பாவித்து அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. அதனால்தான் எந்த வருவாய்துறை ஆவணங்களிலும் அவரை உழவடைதாரராக காண்பிக்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 ஆவணம் வழக்கிடை சொத்து சம்மந்தமான சர்வே எண்ணுக்கு விசாரணை நடைபெற்றதாக காட்டப்படவில்லை என்றால் சரியல்ல, அதே சொத்துதான். தாவா சொத்திற்கும் வா.சா.ஆ.7ற்கும் எவ்வித சம்மந்தமுமில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 அறிவிப்பின் அடிப்படையில் பூசாரி கோனாரை குத்தகைதாரராக வருவாய்துறை ஆவணங்களில் காட்டப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2-ல் பூப்பூனித நீராட்டு விழாவில் மகள் என்றுதான் போட்டிருக்கிறார் தவிர சுவிகாரமகள் என்று குறிப்பிட்டு போடவில்லை என்றால் சரிதான். எனது திருமண பத்திரிக்கையிலும் மகள் என்றுதான் போட்டிருக்கிறார் தவிர சுவிகாரமகள் என்று குறிப்பிட்டு போடவில்லை என்றால் சரிதான். நான் சர்வலிங்ககோனாரின் மனைவியின் தங்கை மகள் என்ற முறையில் மகள் உறவு முறை என்பதின் அடிப்படையில்தான் மகள் என்று போட்டுள்ளார் என்றால் சரியல்ல. பூசாரிகோனார் தாவா சொத்தை 1960லிருந்து தன் சொத்துபோல பாவித்து விவசாயம் செய்து வந்த காரணத்தினால் சர்வலிங்க கோனார் தாவா சொத்தை 12.05.1976ல் வா.சா.ஆ.4 படி உயில் மூலம் பாத்தியப்படுத்தி உள்ளார் என்றால் சரிதான். 1976ல் ஏன் அவ்வாறு உயில் எழுதப்பட்டது என்றால் 1960லிருந்து பூசாரிகோனார் தொடர்ந்து அனுபவம் செய்து வந்த காரணத்தினால் அவரே அந்த சொத்தை வைத்து கொள்ளட்டும் என்று அந்த உயில் எழுதப்பட்டது என்றால் சரிதான். அதனால்தான் அந்த சொத்தை தவிர வேறு சொத்துக்களை பூசாரி கோனாருக்கு, சர்வலிங்ககோனார்

கொடுக்கவில்லை என்றால் சரிதான். 12.05.1976ல் சர்வலிங்ககோனாரும், அழகம்மாளும் சேர்ந்து எழுதி வைத்த உயில் எழுதிய சில காலங்களிலேயே அழகம்மாள் இறந்துவிட்டார் என்றால் சரிதான். வயோதீகம் காரணமாக ஒரு ஆவணம் எழுதிவைக்க வேண்டும் என்ற காரணத்தினால் எழுதி வைக்கப்பட்டது என்றால் சரிதான். 1976லேயே அழகம்மாள் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அழகம்மாள் இறந்த உடன் சர்வலிங்க கோனாருக்கு உடல்நிலை சரியில்லாமல் போய்விட்டது என்றால் சரியல்ல. அழகம்மாள் இறந்த உடன் சர்வலிங்க கோனார் தனியாக என்னுடன் வசித்து வந்தார். அவருக்கு நல்லது, கெட்டது முதலியவற்றை நான்தான் பார்த்தேன், இறுதி சடங்கையும் நான்தான் பார்த்தேன். அந்த சமயம் எனக்கும், பூசாரிகோனார் வகையறாவிற்கும் நல்ல உறவு இல்லை என்றால் சரிதான். என்னவென்றால் என்ன என்று கேட்டுக்கொள்வோம். நல்ல உறவு இல்லை என்றால் சரிதான். பூசாரிகோனார் வகையறா உழவடைதாரராக இருந்த காரணத்தினால் எனக்கு அவர்கள் விவசாயம் செய்து வந்ததில் ஒரு நல்லெண்ணம் இல்லை என்றால் சரியல்ல. பூசாரிகோனார் வகையறாவிடம் 1976ற்கு பின்னிட்டு குத்தகையை விட்டு வெளியேற சொல்லி நான் எதுவும் கேட்கவில்லை. குத்தகை முடிந்த உடன் குத்தகையை கொடுக்க வேண்டும் என்று நான் பூசாரிகோனார் வகையறாவிடம் கேட்டேனா என்றால் அவர்கள் என்னிடம் நேரடியாக கொடுத்தார்கள். அவ்வாறு பூசாரிகோனார் வகையறா குத்தகை என்னிடம் கொடுத்ததற்கு என்னிடம் ஆவணம் இல்லை. என்னுடைய வழக்குரையிலும் அவ்வாறு பூசாரிகோனார் வகையறா குத்தகை என்னிடம் கொடுத்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. சர்வலிங்க கோனார் 1984ல் இறந்த பின்னர் பூசாரிகோனார் வகையறாவும், நானும் எவ்வித உடன்படிக்கையும் ஏற்படுத்தி கொள்ளவில்லை என்றால் சரிதான். அவர்கள் எப்போதும்போல குத்தகை கொடுத்தார்கள். சர்வலிங்ககோனார் இறந்த பின்னிட்டு பூசாரிகோனார் வகையறாவை தாவா சொத்திலிருந்து வெளியே செல்லுமாறு நான் எப்போதும் கேட்கவில்லை. தாவா சொத்தின் சர்வே எண்.146/2 ஆக இருந்தது. அதன் விஸ்தீரணம் 2 ஏக்கர் 20செண்டாக இருந்தது. தாவா சொத்தின் சர்வே எண்.146/2 ஆக நீண்ட நாட்களாக வந்து கொண்டிருந்தது என்றால் சரிதான். சர்வலிங்க கோனார் இறந்த பிறகு தாவா சொத்தின் சர்வே எண்.146/2 ஆனது 146/2A,2B ஆக பிரிக்கப்பட்டது என்றால் 146/2Aதான். வா.சா.ஆ.9,10 சிட்டா, பட்டாவில் சர்வே எண்.146/2B-தான் உள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண்.146/2A பூசாரிகோனார்

மனைவி அம்மாபிள்ளை பெயரில் பட்டா மாற்றப்பட்டுவிட்டது என்றால் பழனிச்சாமி தலைவராக இருந்தபோது, அதை வைத்து பட்டா மாற்றிவிட்டார்கள். சாட்சி பின்னிட்டு பழனிச்சாமி(2ம் பிரதிவாதி) பெயருக்கு மாற்றிவிட்டதாக சொல்கிறார். வா.சா.ஆ.9,10 ஆவணங்கள் பிரிக்கப்பட்ட சர்வே எண் 1ஏக்கருக்கு மட்டும்தான் உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 ஆவணத்தில் சர்வே எண்.146/2B என்றும், விஸ்தீரணம் 0.42.5 ஹெக்டேர் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.10 ஆவணத்தில் சர்வே எண்.146/2B என்றும், விஸ்தீரணம் 0.42.5 ஹெக்டேர் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.146/2A வழக்கு சொத்தில் சொல்லியுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் சர்வே எண்.146/2B சொத்திற்கு தாக்கல் செய்யப்பபட்டுள்ள நிலையில் வழக்கு சொத்து சர்வே எண்.146/2Aக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தமிழ்செல்வி எனது ஊர்காரர் என்றால் சரிதான். 1997வரை எங்கள் ஊரில் இருந்தார்கள், பின்னிட்டு மதுரை சென்றுவிட்டார். அவர் எனக்கு தூரத்து உறவினர் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியும் எனக்கு நெருங்கிய உறவினர் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியும், நானும் அருகருகில் வசித்து வருகிறோம் என்றால் ஒரே தெருவில் வசித்து வருகிறோம். எனவே அவரை எனக்கு தெரிந்த நாளிலிருந்து எனக்கு நன்கு அவரை தெரியும். பூசாரி கோனாரின் மனைவி அம்மாபிள்ளை 1ம் பிரதிவாதிக்கு சொத்தை விற்ற விவரம் எனக்குத் தெரியாது. கிரையத்திற்கு பின் 1ம் பிரதிவாதி பெயருக்கு பட்டா மாறிய விவரம் எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.12-படி அதே சொத்தை 2ம் பிரதிவாதிக்கு சொத்தை விற்ற விவரம் எனக்குத் தெரியாது. குத்தகையை எனக்கு ஒப்படைக்காமல் விற்றது செல்லாது. அம்மாபிள்ளை வகையறா மீண்டும் வேறு இரண்டு பத்திரங்கள் மூலமாக 2ம் பிரதிவாதிக்கு தாகா சொத்தின் ஒரு பகுதியை விற்ற விவரம் எனக்குத் தெரியாது. தாவா சொத்தை 1989ற்கு பிறகு பின்னிட்டு என்னிடம் அம்மாபிள்ளை குத்தகைக்கு கொடுத்து வந்தார். அவ்வாறு குத்தகை கொடுத்ததற்கு ஆவணம் கிடையாது. அம்மாபிள்ளையின் பிள்ளைகள் என்னிடம் குத்தகைக்கு கொடுத்து வந்தார்கள். அவ்வாறு குத்தகை கொடுத்ததற்கு ஆவணம் கிடையாது. அம்மாபிள்ளையின் பிள்ளைகள் எந்த வருடம் வரை குத்தகைக்கு கொடுத்தார்கள் என்றால் இராதாகிருஷ்ணனுக்கு விற்பனை செய்யும் வரை என்னிடம் குத்தகைக்கு கொடுத்து வந்தார்கள். மேற்படி வரி ரசீது போடுவரிடமோ, வேறு யாரிடமோ மேற்படி அம்மாபிள்ளை வகையறா குத்தகைதாரர்கள் என்ற விவரத்தை நான்

சொல்லிக்கொள்ளவில்லை. அம்மாபிள்ளையின் வாரிசுகளை இந்த வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். வாங்கியவர்களை சேர்த்துள்ளேன். அம்மாபிள்ளை வகையறாவை ஏன் சொத்தை விற்றீர்கள் என்று நான் கேட்டுக்கொள்ளவில்லை. அம்மாபிள்ளை வகையறாவை இவ்வழக்கில் ஒரு தரப்பினராக சேர்த்தால் வழக்கின் உண்மைநிலை தெரிந்துவிடும் என்பதால் அவர்களை நான் வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. அம்மாபிள்ளையின் வாரிசுகள் யாரும் உயிருடன் இல்லை. அவர்களில் திருப்பதி ஒருவர் மட்டும்தான் உயிருடன் உள்ளார். மேற்படி இறந்த நபர்கள் என்னிடம் குத்தகைக்கு கொடுத்துள்ளார் என்று நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவர்களில் திருப்பதி என்பவர் கொடுத்தார். அம்மாபிள்ளை வகையறாவின் இறப்பு சான்று, வாரிசு சான்று முதலியவற்றை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை, அதை நான் தாக்கல் செய்ய வேண்டிய அவசியமில்லை. மேற்படி 3நபர்கள் இறந்துவிட்டதாக சொல்லியுள்ளேன், பெரியகருப்பண், வீரணன், முத்து ஆகியோருக்கு பிள்ளைகள் இருக்கிறார்கள், அவர்களை இந்த வழக்கில் நான் தரப்பினராக சேர்க்கவில்லை.
குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

ஒம்:-S.கணேசன்
சார்பு நீதிபதி,
மேலூர்.